சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை! ஜலீல் முஸ்தபா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில்

# குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## GenZ DMK யாசர் அராபத் காணொலியில் சிறப்புரை!

குவைத், ஜூன் 10-

குவைத்தில் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா மக்கள் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் GenZ DMK யாசர் அரபாத் காணொளி மூலம் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார்.

தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா (முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, கடந்த 5.6.2026, வெள்ளிக்கிழமை அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா குவைத் நாட்டில் மக்கள் எழுச்சியுடன் மிகப்பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது.

அமைப்பின் மகளிர் அணியினர் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவிற்கு, தி.மு.க., அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை ஏற்றார், அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

அமைப்பின் இணைச்செயலாளர்கள் ஆயங்குடி ஜெ.சையது முஸ்தபா, சேகரை வெ.செல்லதுரை, குடந்தை சி.தியாகராஜன், துணைச் செயலாளர்கள் விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பின் தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ராமநாதபுரம் பைசான் அலி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டில் தற்போது இளைஞர்களிடம் அரசியல் புரிதலோடு எழுச்சியை உண்டாக்கி இருக்கும் Genz DMK Meetup எனும் ஓர் நிகழ்வை நடத்தி இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய Genz DMK ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான யாசர் அராபத் காணொளி மூலம் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார்.

அப்பொழுது தமிழகத்தில் நடக்கும் ஆட்சியின் அவல நிலை குறித்தும், கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு செய்த பல நலத்திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் நிர்வாகிகள் குடந்தை த.மணிகண்டன், ராதாபுரம் அஜிஜுல்லா, விழுப்புரம் எஸ்.அம்ஜாத், மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, அரியலூர் சௌமியா பாஸ்கரன், தானிப்பாடி சுல்தானா, தானிப்பாடி சே. அஸ்ரப்அலி, உடையார்பாளையம் செந்தில்குமார், பண்ருட்டி ஓ.பி.எஸ்.சிவராமன், திருக்கோவிலூர் அ.பொன்முடி, அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், அரியலூர் பாஸ்கரன், கூத்தாநல்லூர் ஏ.சாகுல் ஹமீது, பரங்கிப்பேட்டை எஸ்.முகமது உசேன், கொரடாச்சேரி காளிமுத்து, கோட்டை பி.மோதிலால், ஆத்தூர் ஜான் பாஷா, மங்கலம்பேட்டை அப்துல் முஜீர், தியாகதுருகம் பி.காதர், லட்சுமாங்குடி சசிகுமார், பரமக்குடி மோகன், திருவாரூர் திருவரங்கன், விருத்தாசலம் ஜெ.முபாரக், உளுந்தூர்பேட்டை என்.சுப்பிரமணியன், குடந்தை ஆர்.முருகன், கள்ளக்குறிச்சி சின்னசாமி மற்றும் மருத்துவர் கிளாட்வின் பாக்கியராஜ், தளபதி பேரவை பாவாஷா கவிஞர் மற்றும் எழுத்தாளரான நிர்மலா தேவி தமிழரசன், சமூக ஆர்வலர் சாமுண்டீஸ்வரி, சமூக ஆர்வலர் ரிஸ்வான்,

கூட்டணிக் கட்சிகளான திராவிடர் கழகம், தே.மு.தி.க., ம.ஜ.க., த.மு.மு.க., எஸ்.டி.பி.ஐ, தமிழ் அமைப்புகளான நந்தவனம், வெளிநாடு வாழ் தமிழர்கள் நல சங்கம், தமிழ்நாடு பொறியாளர் குழுமம், அகில இந்திய திருவள்ளுவர் பத்திரிக்கையாளர் சங்கம், கலகலப்பு நண்பர்கள், தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவை, உதவும் கரங்கள், குவைத் தமிழ் ஓட்டுநர் சேவை மையம், தமிழர்கள் ஓட்டுநர் சேவை மையம், குவைத் தமிழ் மக்கள் சேவை மையம் மற்றும் பல சமூக ஆர்வலர்களும், சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு மறைந்த முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் அவரின் புகழையும்,அவர் தமிழக மக்களுக்கு செய்த தொலைநோக்கு திட்டங்களையும் புகழ்ந்து கூறினார்.

நிகழ்வில் முத்தாய்ப்பாக விழா மேடையில் முழுவதும் பெண்கள் மட்டுமே அமர வைத்து திராவிட முன்னேற்ற கழகம் என்னாளும் பெண்களுக்கு பாதுகாப்பாகவும், பெண்களை மதிக்கக் கூடிய இயக்கமாகவும் இருக்கும் என்பதை பறைசாற்றினர்.

இந்நிகழ்வில் பல மாற்றுக் கட்சி சகோதரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதில் திருப்பத்தூர் மாவட்டம், காட்டேரியை சார்ந்த அமுல்ராஜ், ஏஞ்சலின் பிரதிபா தம்பதியினர் கணவன் மனைவியாக வந்து தங்களை இயக்கத்தில் இணைத்துக் கொண்டது சிறப்புமிக்க தருணமாக இருந்தது.

விழாவில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 103 வது பிறந்தநாள் வாழ்த்து கூறும் விதமாக அவரின் உருவம் பதித்த கேக் வெட்டப்பட்டது அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. கேக் வெட்டும் தருணத்தில் வாழ்க... வாழ்க.. வாழ்கவே.. கலைஞர் புகழ் வாழ்கவே... என கழக உணர்வாளர்களின் முழக்கம் அரங்கை அதிரசெய்தது.

இந்நிகழ்வின் இறுதியில் அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவு மணி மற்றும் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரபீக் ஆகியோர் நன்றி கூறினர்.

அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பையன் (எ) எல்.ஆறுமுகம்

ஜூன் 10 (2024)



1952ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தஞ்சை சட்டமன்றத் தொகுதியில்போட்டியிட்டபோது, மிட்டா, மிராசுகளின் தாக்குதல்களை முண்டாசு கட்டிக் கொண்டு எதிர்த்து நின்று கழகப் பணியாற்றியதால் கலைஞர் அவர்களால் "முண்டாசு சேப்பையன்" என்று அழைக்கப்பட்டவர்.

தொடர்ந்து பத்தாண்டுகள் மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; த.வெ.க ஆட்சி 3 மாதமாவது தாங்குமா என்ற ஆழ்ந்த அய்யப்பாட்டினை எழுப்பியிருக்கிறாரே கழகத் தலைவர் ?

**பட்டணம் :** ஆமாமய்யா; வீடு வீடாக ஏறி இறங்கி இரவல் வாங்கித் தானே இந்த த.வெ.க. ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது!

அரை குறைப் பிரசவம் தானே இந்த ஆட்சி!

அதனால், கழகத் தலைவர் அப்படிச் சொல்லி இருக்கிறார்.

---



திருவாரூர் காட்டூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற கலைஞர் கோட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் சிறப்பாக நடைபெற்று ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஒன்றியச் செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், நகரக் கழகச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---


